முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1260

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.03.2023, ஞாயிற்றுக்கிழமை

1. ஓங்கார பிரம்மமே அரங்கா வாழ்க
ஓங்காரக்குடில்படைத்த தேசிகா வாழ்க
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் இனிதே
ஓதிடுவேன் அரங்கனுக்கு ஞான சக்திகூட
2. கூடவே ஞான அறிவுரை ஆசி
உரைத்திடுவேன் சுபகிருது சால் திங்களில்
(சுபகிருது வருடம் மாசி மாதம் 28 ம் நாள், 12.03.2023, ஞாயிற்றுக்கிழமை)
சுடராக ஆறுமுகப்பெருமான் யானும்
சுருதிபடி அரங்கனுக்கு வழி நடத்துவேன்
3. நடத்தவே அரங்கனின் சக்தி
இந்த கலியுகத்தை மாற்றும் ஞான சக்தியாக
இடரின்றி மக்களிடை பரவிவர
இந்த மாற்றம் உலகமெல்லாம் நடக்க
4. நடக்கவே உலகோருக்கு ஞானசித்தியாகி
உலகினில் ஞானிகள் படை பெருகநேரும்
கலகம் துன்பம் இல்லாத
காப்பான ஞானபூமியாக இந்த உலகம் மாறி
5. மாறியே அரங்கன் அருளாலும்
மகத்துவமான அரங்கன் தர்மத்தாலும்
கூறிடுவேன் உலகமெல்லாம் ஞான ஆட்சிக்காலம்
குரு அரங்கன் வழிகாட்டலில் இனிதே நடந்தேறும்
6. தேறவே அரங்கன் தொண்டர்களென
தேசிகனின் நாமம் சொல்லி அடையாளம்
பாருலகம் எங்கும் கொண்ட மக்களுக்கே
பாடிடுவேன் ஞான ஆட்சி நடத்த உண்டான வாய்ப்பு
7. வாய்ப்புடன் ஞானிகள் சித்தர்கால சூழலில்
நாட்டிவேன் அனைவரும் அழியாமை எனும் சக்தியோடு
இடரின்றி ஆளுமை பெருக்கி
இந்த உலகையே மாற்றும் வல்லமை பெறக்கூடும்
8. கூடவே அன்னதனால் உலகோர்
குருஅரங்கன் இடம் தேடி ஓடி வந்து
இடரின்றி அரங்கன் தரும் மகாமந்திர தீட்சை ஏற்று
எக்காலமும் தர்மசிந்தையோடு வாழ

9. வாழவே உலகினில் மாற்றம் சடுதி
வடிவேலன் யான் இறங்க
இந்த அற்புதம் சடுதி காணக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–